Name of the Newspaper: Dina malar Date: 16.5.18

# சோதனை ஓட்டம், 'சக்சஸ்'

சென்னை, மே 16 –

'ஷெனாய்நகர் – சென்னை சென்ட்ரல் இடையே, விரைவு ரயில் சோதனை ஓட்டம், வெற்றி பெற்றுள்ளது' என, அதிகாரிகள் தெரிவித்தனர்.

சென்னையில், விமான நிலையம் மற்றும் பரங்கிமலையில் இருந்து, நேரு பூங்கா வரையும், விமான நிலையத்தில் இருந்து, சின்னமலை வரையும், மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

ஷெனாய்நகர் – நேரு பூங்கா இடையே இரண்டாவது பாதை பணியும்; நேருபூங்கா – சென்ட்ரல் இடையே, இரு வழி பாதை பணிகளும் முடிந்து, ரயில்வே பாதுகாப்பு கமிஷனர், மனோகரன், நேற்று முன்தினம், டிராலியிலும்,



நேற்று அதிகாலையில், 80 கி.மீ., வேகத்தில், ரயில் இயக்கியும், சோதனை நடத்தினார்.

நேற்று காலையில் இருந்து, மாலை வரை, இந்நிலையங்கள் இடையே, மீண்டும் டிராலியில் சென்றும், சோதனை நடத்தினார். சில இடங்களில், ரயில் பாதையில், அதிகாரிகளுடன் நடந்து சென்றும் சோதனை நடத்தினார்.

'ஷெனாய்நகர் – சென்னை சென்ட்ரல் இடையே, விரைவு ரயில் சோதனை ஓட்டம், வெற்றி பெற்றுள்ளது' என, அதிகாரிகள் தெரிவித்தனர்.

### ஆய்வு

வரும், 18, 19ம் தேதிகளில், சின்னமலை – தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., இடையே, 4.5 கி.மீ., மெட்ரோ ரயில் பாதையில், ரயில்வே பாதுகாப்பு கமிஷனர், விரைவு ரயில் இயக்கி, சோதனை நடத்த உள்ளார்.

இதன்பின், பாதுகாப்பு சான்றிதழ் வழங்கியதும், உடனடியாக, இப்பாதைகளில், ரயில் போக்குவரத்து துவங்குவதற்கு, மெட்ரோ ரயில் நிர்வாகம் தயார் நிலையில் உள்ளது.